# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அசல் வழக்கு எண். 28/2024
நாள் : 12.03.2026
வா.சா. : 1
பெயர் : செல்வராஜ்

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நஷ்ட ஈடு பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதல் பிரதிவாதி காவல் துறையில் ஆயுதப்படையில் பணியாற்றுபவர் திருவாவடுதுறை ஆதினத்தில் பாதுகாவலராக பணிபுரிந்தார். சம்பவத்தின்போது அவர் பணியில் இல்லை என்றால் அது சரியல்ல. எனக்கும் முதல் பிரதிவாதிக்கும் நடந்த பிரச்சனை தனிப்பட்ட பிரச்சனை என்றால் அது சரியல்ல. ஏற்கனவே நான் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து அது தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். முதல் பிரதிவாதி மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்து அதன் விசாரணை இந்த நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். முதல் பிரதிவாதி மட்டுமே நஷ்ட ஈடு கொடுக்க கடமைபட்டவர் என்றும் இரண்டு முதல் ஐந்து பிரதிவாதிகள் எந்தவகையிலும் கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.